# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.12.2023 முதல் 31.12.2023)

**அறிக்கைஎண் 0103/2023** **தேதி.26.12.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 26°செ முதல் 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 6°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 22.12.23 முதல் 25.12.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 27°செ முதல் 31°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 18°C முதல் 22°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (22.12.2023 முதல் 25.12.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 31.12.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22/12 | 23/12 | 24/12 | 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.1 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 1 | 0 |
| 27 | 30 | 29 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 32 | 32 | 31 | 32 |
| 21 | 21 | 18 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 23 | 22 | 22 | 22 |
| 7 | 6 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 2 | 4 | 6 | 7 | 6 |
| 95 | 87 | 80 | 93 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 90 | 90 | 90 |
| 53 | 63 | 50 | 55 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 60 | 60 | 50 | 50 |
| 3 | 8 | 10 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 6 | 6 | 6 |
| 90 | 20 | 110 | 90 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 90 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (27.12.2023 முதல் 31.12.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 30.12.2023 ஆகிய தேதியில் இலேசான தூறல் மழை (அ) வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **27-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **28-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **29-12-2023** | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 1.9 | 0.0 | 0.0 | 0.8 | 0.4 | 0.1 | 0.6 | 0.0 | 0.0 | 0.0 |
| **30-12-2023** | 0.4 | 0.4 | 0.4 | 0.0 | 3.1 | 0.6 | 0.1 | 1.3 | 1.1 | 0.1 | 1.8 | 0.0 | 0.0 | 0.0 |
| **31-12-2023** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 6 -12 கி.மீ வேகமான காற்றுடன் தூறல் (அ) வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. ஒத்தி வைத்த உரமிடல், மருந்து தெளித்தல் மற்றும் களை எடுத்தலை முடிக்கவும்.<br>கடந்த வாரத்தினை விட வரும் நாட்களில் வெப்பநிலை சிறிது உயர்ந்து (30-32 $^{o}$செ) குளிர் குறைந்தும் காணப்படும். |
| நெல் | வளர்பருவம் மற்றும் தானியம் பருக்கும் பருவம் | கடந்த வார மற்றும் தற்போதைய வறண்ட வானிலை காரணமாக கதிர் பருக்கும் பருவத்திலுள்ள சம்பா நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். |
| மக்காச்சோளம் | பூக்கும் பருவம் | நிலவும் வானிலையில் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்படுகிறது. இவ்வாறு தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். ஏனெனில் மருந்துகள் கொண்டு இவற்றை கட்டுப்படுத்த தற்போது இயலாது. |
| பருத்தி | பருத்தி வெடிக்கும் பருவம் | வறண்ட மற்றும் குளிர்ச்சியான வானிலை காணப்படுவதால் குளிர் கால பருத்தியை காலை நேரத்தில் பறிக்கவேண்டும். |
| மஞ்சள் | அறுவடை | வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவம் நடவு செய்த மஞ்சள் கிழங்கினை அறுவடை செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். |

| | | |
|---|---|---|
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னை மரத்திற்கு இரண்டாவது முறையாக யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்போட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ கலந்து இடுவதற்கு இதுவே தகுந்த தருணமாகும். |
| கால்நடைகள் | | பருவ மழை காலங்களில் தொடர்ந்து மழை பெறப்படுவதாலும், புதிதாக முளைத்து வரும் புற்களை கால்நடைகளுக்கு கொடுப்பதாலும் செம்மறிஆடு, ஆடு, மாடு மற்றும் கறவைமாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யவும். |

**குறுஞ்செய்தி**

- நிலவும் வானிலையில் மக்காச்சோளத்தில் அடி சாம்பல் நோய் தென்பட்டால் பாதிக்கபட்ட செடியினை அகற்றவும். தற்போது மருந்துகள் கொண்டு கட்டுப்படுத்த இயலாது.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**